**நிதித் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - 2023**

-----------------------------------------------------------------------------------------

நிதித் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2017 ஒக்தோபர் 04 ஆந் திகதிய 6006 ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், நிதி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மத்திய வங்கி, பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு என்பன அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. நிதிச் சந்தையின் வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிற்கிடையே நிதி சேவைகளை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு பங்களிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டத்தின் செயற்பாடுகள் பெறுபேறுகள் அடிப்படையிலான நிதியளித்தல், முதலீடு அடிப்படையிலான நிதியளித்தல் மற்றும் செயற்திட்ட அமுலாக்கம் மற்றும் கண்காணிப்பு மற்றும் முன் இறுதி கட்டணம் என 03 கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 22,500 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 75 மில்லியனானதுடன் இத் தொகை சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஒக்தோபர் 18 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2023 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட நடவடிக்கைகள் 2023 திசெம்பர் 29 இல் மூடப்பட்டன.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 நடவடிக்கைகளின் நிதி முன்னேற்றம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 339 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில், 22% சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 73 மில்லியன் தொகை செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | ஒதுக்கப்பட்ட மொத்த நிதியையும் குறித்துரைத்தவாறு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 75 மில்லியன் ஆகும். செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஆறு ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் மொத்தக் கடன் பயன்பாடானது ஐ.அ.டொலர் 8.95 மில்லியன் மாத்திரமே ஆகும். இது செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 11.94% ஆகும். | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | -மேற்படி- |
| (iii) | செயற்திட்டமானது பயன்படுத்தப்படாத கடன் மீது 0.25% கடப்பாட்டுக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும். அதன் பிரகாரம், 2018 முதல் 2023 வரை நிதியளிப்பு முகவரிற்கு ரூபா 221,135,313 (ஐ.அ.டொலர் 992,133) சிக்கனமற்ற கடப்பாட்டுக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. | கடப்பாட்டுக் கட்டணங்கள் ERD ஆல் கையாளப்படுவதால் எந்தக் கருத்துரையையும் தெரிவிக்க முடியாது. | -மேற்படி- |
| (iv) | 2023 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | குறித்துரைத்தவாறு இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | செயற்பாடுகளின் எண்ணிக்கை | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| **கூறு 01** | | |
| DLI 1 - நிதி முறைமையின் (CBSL, SEC & IRCSL) ஒருங்கிணைந்த, இடர் அடிப்படையிலான மேற்பார்வையை மேற்கொள்ளுதல் | 3 நடவடிக்கைகள் | 6.5% |

| | | |
|---|---|---|
| DLI 2 - நிதி நுகர்வோர் பாதுகாப்பிற்கான (FCP) நிறுவன மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பை நிறுவுதல். முடிவு செயற்படுத்துதல்: FCP இற்கான சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பை செயற்படுத்துதல் மற்றும் அனைத்து நிதி சேவைகளிலும் FCP இற்கான நிறுவன திறனை மேம்படுத்துதல் | 1 நடவடிக்கை | 6.5% |
| DLI 3 – ஊழியர் சேமலாப நிதியத்தின் (EPF) சொத்துக்கள் (முதலீடுகள்) மற்றும் பொறுப்புக்கள் (சேகரிப்புக்கள்) ஆகியவற்றின் முழுமையான முகாமைத்துவத்திற்கான ஒரு தகவல் முறைமையை நிறுவுதல் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டு மூலோபாயத்தை பின்பற்றுதல். | 1 நடவடிக்கை | 0.00% |
| DLI 4 - நிதி ஸ்திரத்தன்மைக்கு சாத்தியமான அபாயங்களைக் குறைப்பதற்காக கூட்டிணைந்த பிணைகளிற்கான விநியோகம் எதிர் கொடுப்பனவு (DvP) தீர்ப்பனவு முறையை நிறுவுதல். | 3 நடவடிக்கைகள் | 6.5% |
| DLI 5 – எழுத்துறுதி மற்றும் மீள்காப்புறுதி வணிகங்களைப் பிரிப்பதன் மூலம் தேசிய காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தை (NITF) மறுசீரமைத்தல். | 1 நடவடிக்கை | 6.5% |

**கூறு 02**

| | | | |
|---|---|---|---|
| (அ) | மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைக்கான CBSL இன் திறனை வலுப்படுத்துதல் மற்றும் தொடர்புடைய நிதி உட்கட்டமைப்பை நவீனமயமாக்குதல் | 2 நடவடிக்கைகள் | 0.74% |
| (ஆ) | மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைக்கான SEC இன் திறனை வலுப்படுத்துதல் மற்றும் தொடர்புடைய நிதி உட்கட்டமைப்பை நவீனமயமாக்குதல் | 9 நடவடிக்கைகள்<br>12 நடவடிக்கைகள் | 1.65%<br>0.00% |
| (இ) | மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைக்கான IRCSL இன் திறனை வலுப்படுத்துதல் மற்றும் தொடர்புடைய நிதி உட்கட்டமைப்பை நவீனமயமாக்குதல் | 2 நடவடிக்கைகள் | 1.69% |